## வணிகர் தின விழா

**கோவை, மே 12-**

கோவை, பாப்பநாயக்கன்பாளையத்தில் தமிழக வியாபாரிகள் சம்மேளனத்தின் சார்பில் வணிகர் தின விழா கொண்டாடப்பட்டது.

செயலாளர் சுடலைமணி சம்மேளன கொடியை ஏற்றி வைத்தார். பொருளாளர் ஸ்ரீதர் இனிப்பு வழங்கினார். துணைத்தலைவர் ஜெயக்கொடி, ஆலோசகர் ஜான் ஸ்டீபன் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## ஆண்டு விழா

**கோவை, மே 12-**

தாசநாயக்கன்பாளையம் நடுநிலைப் பள்ளி ஆண்டு விழாவும், கல்விப் பணியில் சிறந்த சேவை புரிந்தவர்களுக்கு பாராட்டு விழாவும் காட்டம்பட்டி ஊராட்சி தலைவர் சாந்தி நாராயணசாமி தலைமையில் நடந்தது.

பள்ளித் தலைமை ஆசிரியர் தேவராஜ் வரவேற்றார். ஆசிரியர் அய்யனார் ஆண்டறிக்கை வாசித்தார். கல்வி பணியில் சிறந்த ஒன்றியமாக தேர்வு பெற்றமைக்கு, கூடுதல் உதவிக் கல்வி அதிகாரி சண்முகம் பாரட்டு பெற்றார்.

மாவட்ட அளவில் சிறந்த நடுநிலைப் பள்ளியாக தேர்வு பெற்றதற்கு தலைமை ஆசிரியர் தேவராஜ், அறிவியல் கண்காட்சியில் சிறப்பாக பணியாற்றி செங்குட்டுபாளையம் தலைமை ஆசிரியர் அங்குசாமி, நல்லட்டிபாளையம் தலைமை ஆசிரியர் மகாலிங்கம், ஆசிரியர் ஆராவமுது உட்பட ஆசிரியர்களுக்கு பாராட்டு விழா நடந்தது.

## பணி நியமனம்

**கோவை, மே 12-**

மதுக்கரை ஸ்ரீ கலைவாணி கல்வியியல் கல்லூரி வளாகத்தில் பி.எட்., பயிற்சி முடித்த ஆசிரியர்களுக்கு ஆசிரியர் பணிக்கான நேர்காணல் மே 5, 6ல் நடந்தது.இந்த நேர்காணலில் 40 பேர் தேர்வு பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில், தனியார் மெட்ரிக் பள்ளி தாளாளர்கள், முதல்வர்கள் பங்கேற்று ஆசிரியர்களை நியமனம் செய்தனர்

## பராமரிப்பு பயிற்சி

**கோவை, மே 12-**

'மத்திய அரசின் ஜவுளி அமைச்சகம், விசைத்தறியை இயக்க, பராமரிக்க பயிற்சி அளிக்கிறது. இதில் சேர மே 30க்கும் விண்ண ப்பிக்க வேண்டும்' என, அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் ஜவுளி அமைச்சகத்தின் கீழ், ஈரோடு மாவட்டம் சூரம்பட்டியில் விசைத்தறி சேவை மையம் இயங்குகிறது.

இங்கு, ஜூன் 2ம் தேதி முதல் விசைத்தறி இயக்கம், பராமரிப்பு, ஆடை வடிவமைப்பு, உற்பத்தி செலவு கணக்கீடு குறித்த இரண்டு மாத பயிற்சி துவங்குகிறது.

இப்பயிற்சியின் போது, ஏற்கனவே உள்ள 'டாபி, ஜக்கார்டு, டெர்ரி, லட்சுமி ரூட்டி 'சி' ஆகிய தானியங்கி விசைத்தறிகளுடன், 'சுவிட்சர் புரஜக்டைல்' எனும் நவீன தானியங்கி விசைதத்தறி நிறுவப்பட்டு பயிற்சி அளிக்கப்படும்.

இப்பயிற்சியில் சேர, குறைந்த பட்சம் 18 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும். விரும்புவோர், மே 30க்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்ப படிவம் மற்றும் மேலும் விவரங்களுக்கு, 'இயக்குனர், விசைத்தறி சேவை மையம், 2/118 ஏ, ஜெகநாதபுரம் காலனி, சூரம்பட்டி, ஈரோடு-638009' (தொலைபேசி: 0424-2271357) எனும் முகவரியில் விண்ணப்பிக்க வேண்டும்.

இத்தகவலை, விசைத்தறி சேவை மைய உதவி இயக்குனர் குமாரவேல் தெரிவித்துள்ளார்.



கோவை மேட்டுப்பாளையம் ரோட்டில் உள்ள சங்கனூர் கால்வாய் தூர் வாரும் பணி நடந்து வருகிறது. அழகாக காட்சி தரும் கால்வாயில், குப்பைகளையும் கழிவுகளையும் கொட்டி, மீண்டும் வீணாக்காமல் பாதுகாக்கும் பொறுப்பு மாநகராட்சிக்கு உண்டு.

# தொகுப்பு வீட்டுக்கு நிதி அதிகரிப்பு கேட்போர் எண்ணிக்கையும் உயர்வு

**அன்னூர், மே 12-**

தொகுப்பு வீடு கட்ட வழங்கப்பட்டு வந்த ரூ. 37 ஆயிரம் தற்போது ரூ. 56 ஆயிரமாக உயர்த்தப்பட்டிருப்பதால் தொகுப்பு வீடு கேட்போரின் எண்ணிக்கை அன்னூரில் உயர்ந்துள்ளது.

இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தில் வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ளவர்களுக்கு இலவசமாக தொகுப்பு வீடு கட்டித்தரப்படுகிறது. 10 அடிக்கு 16 அடி அளவுள்ள வீடு கட்ட கடந்த நிதியாண்டு வரை ரூ. 37 ஆயிரம் ஒதுக்கப்பட்டது.

ஒவ்வொரு பஞ்சாயத்திலும் இவ்வளவு தொகுப்பு வீடு கட்ட வேண்டும். பயனாளிகள் தேர்வு செய்து பட்டியல் அனுப்பி ஆறு மாத காலத்திற்குள் தொகுப்பு வீடு கட்டி முடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.

'வீடு கட்ட அரசு ஒதுக்கும் ரூ. 37 ஆயிரத்தில் கட்ட முடியாது என்பதால்' பெரும்பாலான மக்கள் வீடு கட்ட முன்வரவில்லை. அரசு நிர்ணயித்த அளவு தொகுப்பு வீடு கட்ட வேண்டும் என்பதற்காக பஞ்சாயத்து தலைவர்கள் வலுக்கட்டாயமாக சிலரை பிடித்து தொகுப்பு வீடு கட்ட வைத்தனர்.

இந்நிலையில், மார்ச் மாதம் அரசு வெளியிட்ட உத்தரவில், இனி தொகுப்பு வீடு கட்ட ரூ. 55 ஆயிரமும், கழிப்பிடத்திற்கு ரூ. 1200ம் என ரூ. 56 ஆயிரத்து 200 வழங்கப்படும். கூரை வீடு பழுது பார்க்க முன்பு வழங்கப்பட்டு வந்த ரூ. 12 ஆயிரத்தை ரூ. 15 ஆயிரமாக உயர்த்தியது.

அரசின் இந்த உத்தரவால் தொகுப்பு வீடு கேட்காமல் இருந்த பலரும் தொகுப்பு வீடு கேட்கத் துவங்கி விட்டனர். அரசு ஒதுக்கும் ரூ. 56 ஆயிரத்தில் 10க்கு 16 அளவு வீட்டை கட்ட முடியும் என்பதால்,மக்கள் ஆர்வமாக முன் வருகின்றனர்.மே 1ம் தேதி நடந்த கிராமசபா கூட்டத்தில் பலரும் தொகுப்பு வீடு கோரி விண்ணப்பித்துள்ளனர்.

இது குறித்த அ.மேட்டுப்பாளையம் பஞ்., துணை தலைவர் பாப்பண்ணன் கூறியதாவது:

தொகுப்பு வீடு கட்ட ரூ. 37 ஆயிரம் மட்டும் ஒதுக்கியதால் பஞ்சாயத்துக்கு நிர்ணயித்த இலக்கை எட்ட முடியாமல் திணறி வந்தோம். தற்போது ரூ. 55 ஆயிரமாக உயர்த்தியதால் பலரும் ஆர்வமாக விண்ணப்பம் தருகின்றனர். எனவே, அரசு பஞ்சாயத்துகளுக்கு தொகுப்பு வீடு கூடுதலாக ஒதுக்க வேண்டும் என்றார்.

# அகில இந்திய கூடைப்பந்து போட்டியில் சதர்ன் ரயில்வே வெற்றி

**கோவை, மே 12-**

அகில இந்திய கூடைப்பந்து போட்டி பெண்கள் பிரிவில் சென்னை சதர்ன் ரயில்வே அணியும், ஆண்கள் பிரிவில் இந்தியன் ஓவர்சீஸ் பாங்க் சென்னை அணியும் லீக் போட்டியில் வெற்றி பெற்றன.

கோவை மாவட்ட கூடைப்பந்து சங்க பொன்விழாவை முன்னிட்டு ஆண்கள் பிரிவில் 50 வது ஆண்டு நாச்சிமுத்து கவுண்டர் கோப்பை மற்றும் பெண்கள் பிரிவில் ஏழாம் ஆண்டு சி.ஆர்.ஐ.,பம்ப் கோப்பைக்கான லீக் முறையிலான போட்டி வ.உ.சி.,மைதாதனத்தில் நடந்து வருகிறது.

ஆண்கள் பிரிவில் ஒன்பது அணிகள் இரண்டு பிரிவுகளாகவும், பெண்கள் பிரிவில் ஆறு அணிகள் இரண்டு பிரிவுகளாகவும் லீக் முறையில் மோதுகின்றன.

**ஆண்கள் பிரிவு:** லீக் போட்டியில் இந்தியன் ஓவர்சீஸ் பாங்க் 94-61 என்ற புள்ளி கணக்கில் செகந்திராபாத் சவுத் சென்ட்ரல் ரயில்வே அணியை வென்றது. ஆட்டத்தின் துவக்கத்திலிருந்தே பாங்க் வீரர்கள் சிறப்பாக விளையாடி முன்னிலையில் இருந்தனர். இடைவேளையில் 50-33 புள்ளி கணக்கில் இருந்தனர்.

ஆட்டத்தின் முடிவில் இந்தியன் ஓவர்சீஸ் பாங்க் 33 புள்ளிகள் வித்தியாசத்தில் வென்றது. பாங்க் அணியில் தினேஷ், மெகர் பாண்டே, அபிலாக் பவுல், ரவிமேத்யு ஆகியோர் தலா 10 புள்ளிகள் எடுத்தனர். ரயில்வே அணியில் பங்கஜ், பிரசாத், நிகில்பாத் ஆகியோர் தலா எட்டு புள்ளிகள் எடுத்தனர்.

மற்றொரு லீக் போட்டியில், கொச்சின் கஸ்டம்ஸ் 80-53 என்ற புள்ளி கணக்கில் சண்டிகார் சி.ஆர்.பி.எப்.அணியை வென்றது. ஆட்டத்தின் இடைவேளை வரை, இரண்டு அணி வீரர்களும் சம நிலையில் புள்ளிகளை குவித்தனர். இடைவேளையின் போது கஸ்டம்ஸ் அணி 35-30 புள்ளிகணக்கில் முன்னிலை பெற்றிருந்தது. ஆட்டத்தின் முடிவில் 33 புள்ளிகள் வித்தியாசத்தில் கஸ்டம்ஸ்-சென்ட்ரல் எக்சசைஸ் அணி வெற்றி பெற்றது.

**பெண்கள் பிரிவு:** லீக் போட்டியில் சென்னை சதர்ன் ரயில்வே அணி 61-33 புள்ளி கணக்கில் ஹூப்ளி சவுத் வெஸ்டர்ன் ரயில்வே அணியை வென்றது. இரண்டு அணி வீராங்கனைகளும் ரயில்வே அணிகளுக்காக இங்கு விளையாடுவது போல் இந்தியன் ரயில்வே போட்டியிலும் அடிக்கடி சந்திப்பது உண்டு. எனவே ஒவ்வொருவரும் அவரவர் திறமையை நன்கு அறிந்துள்ளனர்.

சென்னை ரயில்வே வீராங்கனைகள் ஆட்டத்தின் துவக்கத்திலிருந்தே தங்கள் அணிக்கு புள்ளிகளை குவித்தனர். இடைவேளையிலும் சென்னை அணியினர் நான்கு புள்ளி வித்தியாசத்தில் முன்னிலையில் இருந்தனர். ஆட்டத்தின் முடிவில் சென்னை ரயில்வே 28 புள்ளிகள் வித்தியாசத்தில் போட்டியின் முதல் வெற்றியை பெற்றனர்.

சென்னை ரயில்வே நித்தியா ஆறு புள்ளியும், ஷியாமளா எட்டு புள்ளியும், ஆதிரை 10 புள்ளியும், அனிதா 26 புள்ளியும் எடுத்தனர். சவுத் வெஸ்டர்ன் ரயில்வே அணி ரேஷ்மா 14 புள்ளியும், சஜினா, சுதா தலா 10 புள்ளியும் எடுத்தனர்.

# பேரூர் பகுதி மாணவர்கள் பிளஸ் 2 தேர்வில் சாதனை

**பேரூர், மே 12-**

பேரூர் பகுதியில் பிளஸ் 2 தேர்வில் மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

செல்வபுரம் சிருஷ்டி வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி நான்காவது ஆ ண்டாக பிளஸ்டு தேர்வில் நூறுசதவீதம் தேர்ச்சி பெற்று சாதனை படைத்துள்ள து. இதில், வினோத் என்ற மாணவர் முதலிடத்தையும், விஷ்ணுகுமார் இரண்டாம் இடத்தையும், தர்மராஜ் மூன்றாம் இடத்தையும் பிடித்தனர். சாதனை புரிந்த மாணவர்களுக்கு பள்ளி நிறுவனர் பொன்னுசாமி, பள்ளி செயலர் ராஜேஸ்வரி, முதல்வர் செல்லதுரை ஆகியோர் வாழ்த்து தெரிவித்தனர்.

வடவள்ளி சாவறா பள்ளி பிளஸ் 2 தேர்வில் நூறுசதவீதம் தேர்ச்சி பெற்றுள் ளது. இதில், கவின்முகில் முதலிடத்தையும், ராகவேந்திரன் இரண்டாம் இடத்தையும், டேவிட் ஜோசப் மூன்றாம் இடத்தையும் பிடித்தனர். மேலும் 50 சதவீத மாணவர்கள் ஆயிரத்திற்கு மேல் மதிப்பெண்களை பெற்றனர்.



வர்ம மருத்துவம் குறித்த தேசிய கருத்தரங்கம், கோவை வேளாண் பல்கலையில் நேற்று நடந்தது. விழா மலரை மணிபால் உயர் கல்வி அகடமி முன்னாள் துணைவேந்தர் ஹெக்டே வெளியிட்டார். அருகில், மத்திய ஆராய்ச்சி நிறுவன முன்னாள் இயக்குனர் வேலுசாமி, திருமூலர் வர்ம ஆராய்ச்சி தலைவர் லோகநாதன், ஆர்ட்ஸ் ஆராய்ச்சி நிறுவன நிர்வாக இயக்குனர் ரேணுகா, செயலாளர் சுரேஷ் ஆகியோர் உள்ளனர்.

# வர்ம மருத்துவத்தை அறிவியல் முறைப்படி எதிர்காலத்தில் வெளியிட வேண்டுகோள்

**கோவை, மே 12-**

''வர்ம மருத்துவத்தில் கிடைத்த பயன்களை அறிவியல் முறைப்படி எதிர் காலத்தில் வெளியிடுதல் வேண்டும்,'' என, வர்ம கலை குறித்த தேசிய வர்மவியல் கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டது.

கோவை வேளாண்மை பல்கலையில், தேசிய வர்மவியல் கருத்தரங்கம் கோவை கலைகளின் ஆய்வு நிறுவனம் நடத்தியது. கலைகளின் ஆய்வு நிறுவனத்தின் நிர்வாகி சண்முகம்,' இலக்கியங்களில் வர்மக் கலைகள்' பற்றி குறிப்பிட்டுள்ளதை எடுத்துக் கூறினார்.

கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர் டாக்டர் யோகநாதன் பேசுகையில்,''வர்ம மருத்துவத்தின் கிடைத்த பயன்களை அறிவியல் முறைப்படி எதிர்காலத்தில் வெளியிட வேண்டும். கருத்தரங்கம் குறிக்கோளை அடையும் படிக்கட்டாக அமைந்துள்ளது,''இவ்வாறு அவர் பேசினார்.

இந்திய கலைகளுள் பழமையான மருத்துவக் கலை வர்மக் கலை. நோயாளியின் உடம்பில் உள்ள வர்மப் புள்ளிகளை மிதமான அழுத்தம் செய்தால் உடல்நோய் குணமாவதாகவும், பக்க விளைவுகள் ஏதும் ஏற்படுத்துவதில்லை என்றும் கருத்தரங்கில் இம்மையத்தின் நிர்வாகிகள் தெரிவித்தனர்.

வர்ம சிகிச்சை குறித்தும், செயல்முறை குறித்தும் வீடியோ மூலம செயல் விளக்கம் அளித்தனர். வர்ம மருத்துவ சிகிச்சை முறை, மனித உடலில் உள்ள வர்மப்புள்ளிகள் பற்றிய விபரம், இதுகுறித்து சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாடல்கள், ஆய்வறிக்கை பற்றிய விபரங்கள் கொண்ட புத்தகம் கருத்தரங்கில் வினியோகம் செய்யப்பட்டது.

# பெரியநாயக்கன்பாளையத்தில் ரூ.43 லட்சத்தில் வளர்ச்சி பணி

**பெ.நா.பாளையம், மே 12-**

''கோவை பெரியநாயக்கன்பாளையம் அருகே உள்ள எண் 4 வீரபாண்டி பேரூராட்சியில், ரூ.43 லட்சத்தில் பல்வேறு வளர்ச்சிப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளது,'' என, பேரூராட்சி தலைவர் ஜெயராமன் தெரிவித்தார்.

பேரூராட்சி தலைவர் ஜெயராமன் கூறியதாவது:

கூட்டணி கட்சி வேறுபாடு இல்லாமல் பேரூராட்சியின் அனைத்து வார்டுகளிலும் வளர்ச்சிப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பேரூராட்சிக்குட்பட்ட இரண்டாவது வார்டில் நான்கு லட்சத்து 66 ஆயிரம் ரூபாய் செலவில் உரக்கிடங்கு, சிமெண்ட் சாலைகள், தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. மூன்று, நான்காவது வார்டுகளை இணைக்க தார்சாலை ரூ.26 லட்சத்து 35 ஆயிரம் செலவில் போடப்பட்டுள்ளது.

இதே வார்டில் ரூ. 35 ஆயிரம் செலவில் தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. அறிவொளி நகரில் ரூ. ஏழு லட்சத்து 35 ஆயிரம் செலவில் பல்வேறு வளர்ச்சிப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

ஐந்தாவது வார்டில் ரூ.ஐந்து லட்சத்து 60 ஆயிரம் செலவில் சிமெண்ட் சாலை, ரூ. 45 ஆயிரம் செலவில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பத்தாவது வார்டில், ரூ. 6 லட்சத்து 62 ஆயிரம் செலவில் வளர்ச்சிப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பேரூராட்சி முழுவதும் 9 சோடியம் விளக்கு உட்பட 47 தெரு விளக்குகள் புதியதாக அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பேரூராட்சி தலைவர் ஜெயராமன் கூறினார்.

# தொழில் நிறுவனங்கள் விரிவாக்க நடவடிக்கையில் இறங்க வேண்டும்

## இந்திய தொழில்கள் கூட்டமைப்பு தலைவர் பேட்டி

**கோவை, மே 12-**

''கோவை தொழில் நிறுவனங்கள், விரிவாக்க நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்,'' என சி.ஐ.ஐ., தலைவர் அசோக் கூறினார்.

இந்திய தொழில்கள் கூட்டமைப்பின் கோவை கிளை புதிய தலைவராக தேர்வு செய்யப்பட்ட அசோக் அளித்த பேட்டி:

கோவை தொழில் நிறுவனங்கள், பல துறைகளில் முன்னிலையில் உள்ளன; பொருளாதாரம் வேகமாக வளரும் நிலையில் இந்நிறுவனங்கள், விரிவாக்க நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். பெங்களூரு, சென்னை, பூனே, சண்டிகார் போன்ற நகரங்களுக்கு இணையான வளர வளர்ச்சி வேகத்தை அதிகரிக்க வேண்டும். வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். தமிழக வளர்ச்சி குறித்த தொலை நோக்கு அறிக்கையை 'தமிழ்நாடு விஷன் 2025' ஐ, சி.ஐ.ஐ.,தயாரித்துள்ளது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள சில பரிந்துரைகளுக்காக, அரசுடன் சி.ஐ.ஐ., இணைந்து செயல்படும். தமிழகத்தில் உள்ள, 101 சிறந்த தொழில் முனைவோர் குறித்த புத்தகத்தை சி.ஐ.ஐ., வெளியிட்டுள்ளது. இதில், மூன்றில் ஒரு பங்கினர், கோவை சேர்ந்தவர்களே.

தனியார் 'ஈக்விட்டி', முதலீட்டு சந்தை, ஐ.எப்.சி., போன்ற நிதி நிறுவனங்கள் மூலம் கிடைக்கும் நிதி வளத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். வேளாண் சார்ந்த தொழில் வளர்ச்சிக்கு, முக்கியத்துவம் அளிக்கப்படும்.

பண்ணை உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், நவீன கருவிகள், நவீன தொழில்நுட்ப முறைகளை அறிமுகம் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படும். கல்வி நிறுவனங்களுடன் இணைந்து, திறமையான மனித வளத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அசோக் கூறினார்.

சி.ஐ.ஐ., துணைத்தலைவர் ரவிசாம் கூறுகையில், ''கோவை தொழில் நிறுவனங்களின் போட்டி திறனை மேம்படுத்த உதவும் நிகழ்ச்சிகள் நடத்தப்படும்.

ஈரோடு போன்ற பகுதிகளில், தமிழ்நாடு வேளாண் பல்கலை உதவியுடன், வேளாண் சார்ந்த தொழில்களில் கவனம் செலுத்தப்படும்.

பொள்ளாச்சி, திருப்பூர், சேலம் போன்ற பகுதிகளிலும் வளர்ந்து வருவதால், அப்பகுதிகளிலும், சி.ஐ.ஐ., செயல்பாடுகள் விரிவுபடுத்தப்படும்,'' என்றார்.

# வேளாண் பல்கலை சார்பில் நாளை இலவச மருத்துவ முகாம்

**கோவை, மே 12-**

கோவை வேளாண் பல்கலையின் சார்பில், தொண்டாமுத்தூர் அருகே நாட்டு நலப்பணித் திட்ட முகாம் துவங்கப்பட்டுள்ளது. முகாமில், நாளை இலவச பொது மருத்துவ முகாம் நடக்கிறது.

தொண்டாமுத்தூர் அருகே உள்ள தேவராயபுரம் கிராமத்தில், மே 10 முதல் நாட்டு நலப்பணித் திட்ட முகாம் நடக்கிறது. முகாமில், விவசாயம் சார்ந்த தொழில் நுட்பங்கள், பொதுமக்கள் பயன் பெறும் வகையில் மருத்துவ முகாம்கள் உள்ளிட்ட பல நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முகாமையொட்டி, நாளை இலவச பொது மருத்துவ முகாம், குழந்தைகள் நல மருத்துவம் மற்றும் ரத்த வகை கண்டறியும் பரிசோதனை முகாம் ஆகியவை தேவராயபுரம் அரசு பள்ளி வளாகத்தில் நடைபெறவுள்ளது. வேளாண் பல்கலை டாக்டர் அருள்மொழி மருத்துவ முகாம்களை நடத்தவுள்ளார்.

கோவை கே.ஜி. மருத்துவமனை மற்றும் ஸ்ரீ மகா கணபதி அறக்கட்டளையுடன் இணைந்து நடத்தும் ரத்த வகைகளை கண்டறியும் முகாமும், நாளை மாலை 4.00 மணி முதல் மாலை 6.30 மணி வரை நடைபெறும்.

பொதுமக்கள் இந்த மருத்துவமுகாம்களில் பங்கேற்று பயன் அடையலாம். ஏற்பாடுகளை நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் செய்துள்ளனர்.

இத்தகவலை, வேளாண் கல்லூரி முதல்வர் வணங்காமுடி தெரிவித்துள்ளார்.

# தொழில் நிறுவனங்களுக்கு சொத்து வரியை உயர்த்தக்கூடாது

## இந்திய தொழில் வர்த்தக சபை கருத்து

**கோவை, மே 12-**

தொழில், வர்த்தக நிறுவனங்களின் சொத்து வரியை அதிகளவில் உயர்த்தக்கூடாது, என இந்திய தொழில் வர்த்தக சபை கருத்து தெரிவித்து உள்ளது.

இந்திய தொழில் வர்த்தக சபையின் கோவை கிளை தலைவர் பாலசுந்தரம் வெளியிட்டுள்ள அறிக்கை:

கோவை மாநகராட்சியில், சொத்து வரி அதிகளவில் உயர்த்தப்படலாம், என கிடைத்த தகவல், தொழில் மற்றும் வர்த்தக நிறுவனங்களை பெரும் கவலையில் ஆழ்த்தி உள்ளன. தொழில், குப்பை, தண்ணீர் வரியை, தொழில் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் அதிகளவில் செலுத்தி வருகின்றன; மத்திய, மாநில அரசுகளுக்கு அதிகளவில் வரியை செலுத்தி வரும் நிலையில், அதிக சொத்து வரியை விதிப்பது தவறானது; நியாமானதும் அல்ல.

அனைத்து சொத்துக்கள் மீதான வரியை ஆய்வு செய்தல் அவசியம். ஏற்கனவே உள்ள கட்டடங்களில் கூடுதலாக கட்டப்பட்டவை, பயன்பாட்டில் செய்யப்பட்ட மாறுதல், கட்டடங்களில் செய்யப்பட்ட மாறுதல்களை கண்டறிதல் அவசியம். கட்டடங்களை ஆய்வு செய்யாமல், தற்போதுள்ள வரியில், குறிப்பிட்ட சதவீதத்தை உயர்த்துவதால், புதிய கட்டடங்கள் மீது தான் அதிக வரிச்சுமை ஏறுகிறது; இது, சரி செய்யப்பட வேண்டும்.

ஜெ.என்.என்.யு.ஆர்.எம்., திட்ட செலவை எதிர் கொள்ள, மாநகராட்சி எடுக்கும் முயற்சிக்கு இந்தியதொழில் வர்த்தக சபை ஆதரவளிக்கும். கோவை மாநகராட்சி, வரி உயர்வு குறித்த அனைத்து விவரங்களையும், இன்டர் நெட்டில் வெளியிட வேண்டும். இதன் மூலம், தங்கம் சுமையை கோவை மக்கள் ஏற்பர்.

இவ்வாறு, இந்திய தொழில்வர்த்தக சபை தலைவர் பாலசுந்தரம் கூறியுள்ளார்.




கோவை ஆர்.எஸ்.புரம் ஆடிட்டர் சங்க அலுவலகத்தில் சங்கமம் கருத்தரங்கு நேற்று நடந்தது. இதில்,சேர்மன் ராஜேந்திரகுமார் பேசினார். அருகில், கோவை ஆடிட்டர் சங்கத் தலைவர் கோபாலகிருஷ்ணன், செயலர் விஜயசுந்தர் ஆகியோர் உள்ளனர்.